**காலாண்டுத்தேர்வு மாதிரி வினாத்தாள் --- 1 ( 2022 )**

**பன்னிரெண்டாம் வகுப்பு**

**வணிகவியல்**

நேரம் : 3.00 மணி மதிப்பெண் : 90

**பகுதி ---- I**

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 × 1 = 20

1. அறிவியல் பூர்வ மேலாண்மை கோட்பாட்டை உருவாக்கி வளர்த்தவர் --------
அ) ∴ போயல் ஆ) டேலர் இ) மேயோ ஈ) ஜேக்கப்

2. வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பதை ---------- என்பர்
அ) ஒழுங்கு ஆ) பயன்பாடு இ) வேலைப்பகிர்வு ஈ) சமத்துவம் முக்கியமான

3. பின்வருவனவற்றுள் எது மேலாண்மையின் முக்கிய பணிகள் அல்ல?
அ) முடிவெடுத்தல் ஆ) திட்டமிடுதல் இ) ஒழுங்கமைத்தல் ஈ) பணியமர்த்துதல்

4. முதல் நிலைச் சந்தை -------- எனவும் அழைக்கப்படுகிறது
அ) இரண்டாம் நிலைச்சந்தை ஆ) பணச்சந்தை
இ) புதிய வெளியீடுகளுக்கான சந்தை ஈ) மறைமுகசந்தை

5. மூலதனச் சந்தை ----------- ஐ வழங்குவதில்லை.
அ) குறுகியகால நிதி ஆ) கடனுறுதி பத்திரங்கள்
இ) சமநிலை நிதி ஈ) நீண்டகால நிதி

6. குறியிலக்கு மேலாண்மையானது ---------- என்பவரால் அமெரிக்காவில் பிரபலப்படுத்தப்பட்டது.
அ) பேராசிரியர் ரெட்டின் ஆ) ஜார்ஜ் ஓடியோர்ன்
இ) ஹென்றி பயோல் ஈ) எப்.டபிள்யூ. டெய்லர்

7. நம்பிக்கையற்ற ஊகவணிகர்கள் என்பவர் ------------
அ) மான் ஆ) கரடி இ) காளை ஈ) வாத்து

8. பணச்சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு --------------
அ) வணிக வங்கி ஆ) இந்திய ரிசர்வ் வங்கி இ) பாரதஸ்டேட் வங்கி ஈ) மைய வங்கி

9. தவறான கூற்று எது?
அ) மனித வளமானது கண்டுபிடிப்பு மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது.
ஆ) மனித வளங்கள் உணர்ச்சி பூர்வமானவை.
இ) மனித வளங்களின் நடத்தைகளை ஊகிக்க முடியும்
ஈ) மனித வளங்கள் நகரும் தன்மை கொண்டது

10. விளம்பரம் என்பது ஒரு ---------------ஆட்சேர்ப்பு வளமாகும்.
அ) அக வளங்கள் ஆ) புறவளங்கள் இ) முகவர் ஈ) புறத்திறனீட்டல்

11. பொருத்தமற்ற விண்ணப்பதாரரை நீக்குவதற்கான செயல்முறை ------------- என அழைக்கப்படுகிறது.
அ) தேர்வு ஆ) ஆட்சேர்ப்பு இ) நேர்காணல் ஈ) தூண்டுதல்

12. உடனடி சந்தை எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது?
அ) பொருட்கள் ஆ) பரிவர்த்தனை இ) ஒழுங்குமுறை ஈ) காலம்



13. கூற்று ( A ) : பணி செய்யும் இடத்திலேயே பணியாளர்களுக்கு அங்குள்ள மேற்பார்வையாளரால் (அ) முன் அனுபவம் பெற்றவரால் பணி சார்ந்த போதனை அளிக்கப்படுவது பணிவழி பயிற்சி ஆகும்.
காரணம் (R) : பணிவழி பயிற்சியின் கோட்பாடு " செய்து கற்றல் மற்றும் சம்பாதித்த பிறகு கற்றல்"
அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது A -க்கு சரியான விளக்கம் அல்ல.
ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது A -க்கு சரியான விளக்கம்
இ) A சரி ஆனால் R தவறு
ஈ) A தவறு ஆனால் R சரி

14. சந்தையிடுகை முறையின் ஆரம்பநிலை ------------------
அ) முற்றுரிமைமுறை ஆ) பணத்திற்கு மாற்றுதல்
இ) பண்டமாற்று முறை ஈ) தற்சார்பு உற்பத்தி

15. பொருத்துக
1. சேவை சந்தையிடுதல் --- a. சந்தையே அல்ல
2. தனியிட சதை ---- b. சந்தையிடுதல் முறையில் புதியநுட்பம்
3. வைரல் சந்தை --- c. சந்தையிடுதலின் சிறப்பு பிரிவு
4. பதுங்கியிருந்து சந்தையிடுதல் ---- d. சந்தையிடுதலின் மற்றொரு உத்தி
அ) d a c b ஆ) b c d a
இ) c a d b ஈ) a b c d

16. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் ---------------
அ) 01.01.1986 ஆ) 01.04.1986 இ) 15.04.1987 ஈ) 15.04.1990

17. ஜான் F. கென்னடி அவர்களின் கூற்றுப்படி பின்வருபவற்றில நுகர்வோர் உரிமைகளில் இடம் பெறாதவை எது?
அ) பாதுகாப்பு உரிமை ஆ) தேர்ந்தெடுக்கும் உரிமை
இ) நுகரும் உரிமை ஈ) தெரிவிக்கும் உரிமை

18. தூய சில்லரை விற்பனையாளர் என அழைக்கப்படுவர் -------------
அ) சந்தை உருவாக்குநர்கள் ஆ) நடவடிக்கை தரகர்கள்
இ) வியாபாரிகள் ஈ) முகவர்கள்

19. செபியின் தலைமையகம் --------------- ஆகும்.
அ) கல்கத்தா ஆ) மும்பை இ) சென்னை ஈ) தில்லி

20. சந்தையிடுகையில் சந்தையிடுகையாளர் முதலில் தெரிந்து கொள்ள விரும்புவது -----------
அ) வாடிக்கையாளரின் தகுதி ஆ) பொருளின் தரம்
இ) வாடிக்கையாளரின் பின்புலம் ஈ) வாடிக்கையாளரின் தேவைகள்

## பகுதி — II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 2 = 14

21. மேலாண்மை என்றால் என்ன?
22. முக்கிய முடிவுப் பகுதிகள் ( KRA) என்பது என்ன?
23. மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர்கள் யார்?
24. பங்குச் சந்தை என்றால் என்ன?
25. செபியின் இரண்டு நோக்கங்களை எழுதுக.
26. மனிதவள மேலாண்மை என்றால் என்ன?
27. பதவி உயர்வு என்றால் என்ன?
28. சந்தை என்றால் என்ன?
29. கலப்படத்திறகு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
30. எண்ணெய், காபி ஆகியவை பண்டகச் சந்தையில் விற்கப்படுகின்றன. இவை எப்பண்டகச் சந்தையைச் சார்ந்தது?

## பகுதி — III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21

31. மேலாண்மையை நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்துக. ( ஏதேனும் 3 )
32. கருவூல இரசீதின் பொது இயல்புகள் யாவை? ( ஏதேனும் 3 )
33. காளை மற்றும் கரடி ஊக வணிகர்களை விளக்குக.
34. புறத்தோற்றமற்ற பத்திர கணக்கிற்கு தேவைப்படும் ஆவணங்களைகூறுக.
35. மனித வள மேலாண்மையின் சிறப்புபியல்புகளில் மூன்றினை எழுதுக.
36. வேலைவாய்ப்பு இணையதளங்கள் என்றால் என்ன?
37. கட்டமைக்கப்பட்ட நேர்காணல் என்றால் என்ன?
38. சந்தையிடுகையின் நோக்கங்கள் யாவை?
39. செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன?
40. மூளையின் சிந்திக்கும் ஆற்றல், மனத்திறன் நுண்ணறிவு போன்றவற்றை சோதிக்கப் பயன்படும் பரிசோதனையின் பெயர் என்ன? எந்த அளவீட்டால் அது அளவிடப்படுகிறது? அதன் முதன்மை நோக்கம் யாது?

## பகுதி — IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 × 5 = 35

41. அ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி. ( ஏதேனும் ஐந்து )

( அல்லது )

ஆ) பாரம்பரிய சந்தையிடுகை எவ்வாறு மின் சந்தையிலிருந்து வேறுபடுகிறது - விளக்கு



42. அ) மேலாண்மயின் முக்கிய பணிகளை கூறி விளக்குக ( ஏதேனும் ஐந்து )

( அல்லது )

ஆ) நுகர்வோரின் பொறுப்புகள் யாவை? ( ஏதேனும் 5 )

43. அ) முதல் நிலைச்சந்தை மற்றும் இரண்டாம் நிலைச்சந்தைக்கும் இடையேயான வேறுபாடுகளை விளக்குக.

( அல்லது )

ஆ) மனித வளத்தின் சிறப்பியல்புகளை விளக்குக. ( ஏதேனும் 5 )

44. ஆ) பல்வேறு வகையான நிதிச்சந்தைகளை விவரிக்க. ( ஏதேனும் 5 )

( அல்லது )

ஆ) செபியின் பணிகளை விவரி ( ஏதேனும் 5 )

45. அ) ஆட்சேர்ப்பின் அகவள முறையை விளக்குக

( அல்லது )

ஆ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்? ( ஏதேனும் ஐந்து )

46. அ) நவீன சந்தையிடுதல் ஏதேனும் இரண்டினை விளக்குக.

( அல்லது )

ஆ) பங்குச் சந்தை பணிகளை விவரி? ( ஏதேனும் 5 )

47. அ) பணிவழி பயிற்சிக்கும், பணிவழியற்ற பயிற்சி முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

( அல்லது )

ஆ) சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சி பற்றி விவரி.